05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# மு. வரதராசன் நாவல்களில் அகத்திணை கூறுகள்
# UNSUR *AKATHTHIN:AI* DALAM NOVEL M.VARATHARASAN

சி. நாகராணி த/பெ சிமஞ்சலம்
**S . NAGARANI A/P SIMANCHALAM**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகம்
**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2019**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNSUR *AKATHTHIN:AI* DALAM NOVEL M.VARATHARASAN

S . NAGARANI A/P SIMANCHALAM

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEHI
IJAZAH SARJANA SASTERA (KESUSASTERAAN TAMIL)
(MOD PENYELIDIKAN)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2019

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# நன்றியுரை

தாய் வாழ்க தாய்! தந்த தமிழ் வாழ்க!

இந்த ஆய்வுப் பணியை இனிதே நடத்தி முடித்திட அருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு என் முதற்கண் வணக்கம். இறைவனடியில் சேர்ந்துவிட்டாலும் என்றும் நினைவில் வாழும் அன்பு தாத்தா துரைசாமி, பாட்டி அப்பையம்மா, பாட்டி இராமுலம்மா, அப்பா சிமஞ்சலம், மாமனார் மாலி, மாமா ஸ்ரீராமுலு, பெரியம்மா சுப்பம்மாவிற்கும் இவ்வேளையில் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறேன். மு. வரதராசன் நாவல்களில் அகத்திணைக் கூறுகள் என்ற தலைப்பில் ஆய்வு செய்ய வாய்ப்பும் அனுமதியும் அளித்த சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு எனது முதற்கண் வணக்கம். இவ்வாய்வேட்டினை சிறப்புற முடிக்க ஆக்கமும் ஊக்கமும் தந்து வழிகாட்டிய மதிப்புமிகு நெறியாளர் இணை பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி அவர்களுக்கும் துணை நெறியாளர் இணை பேராசிரியர் முனைவர் முகம்மது ரோஸ்லி பின் சாலுதீன் அவர்களுக்கும் உளப்பூர்வமான நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன். இவ்வாய்வேட்டினைச் செம்மையுறச் செய்ய உதவிக் கரம் நீட்டிய எனது அன்பிற்குரிய கணவர் திரு. இராஜ் மோகன் ராவ், என் செல்வங்கள் மகள் இரா. கலைவாணி, மகன் யோகேந்திரன் ராவ், எனதருமை தாயார் இராஜம்மா, மாமியார் தாலம்மா, மாமா முனுசாமி, தம்பி சிவா குடும்பத்தினர், தங்கை சந்திரிகா குடும்பத்தினர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஆய்வேடு பூர்த்தியாகப் பெரிதும் உதவிய தம்பி சரவணன், சகோதரிகள் முனைவர் இராஜேஸ்வரி கோவிந்தன், திருமதி நவமணி, திருமதி தேவகி, மகேஸ்வரி இளையராணி, தோழிகள் முனைவர் மனோன்மணி, திருமதி ஆனந்தி, மகேஸ்வரி தங்கராஜு அவர்களையும் நினைவு கூர்வதில் பெருமையடைகிறேன். இறுதியாக, இவ்வாய்வேட்டினைச் சிறப்புடன் செய்து முடிக்க பல வகைகளில் உதவிய ஐயா இராமநாதன் அவர்களுக்கும், என் மதிப்பிற்குரிய முன்னாள் கல்லூரி விரிவுரையாளர் சுதந்திராதேவி, மலேசிய புத்ரா பல்கலைக்கழக இணை பேராசிரியர் முனைவர் பரமேஸ்வரன், சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் கார்த்திகேஸ், ஸ்ரீ ஈப்போ படிவம் ஆறு ஆசிரியர்கள், படிவம் ஆறு மாணவமணிகள், முன்னாள் மாணவர்களான நந்தகுமார், விவேகானந்தன், தமிழீழமங்கை, கார்த்திகாகுமாரி, தாரணி, தினேஸ்வரி, சர்வினித்த, திவாகர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# ஆய்வுச்சாரம்

மு. வரதராசன் நாவல்களில் வெளிப்படும் அகத்திணைக் கூறுகளை உரிப்பொருள் அடிப்படையில் அடையாளங்கண்டு, பகுப்பாய்ந்து, சங்க கால (கி.மு 500 - கி.பி. 200) மாந்தர்களின் வாழ்க்கை முறைகளையும் மு.வரதராசன் நாவல்களில் காணப்படும் கதைமாந்தர்களின் வாழ்க்கை முறைகளையும் ஒப்பிட்டு விளக்குவதை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வு, பண்புசார், நூலாய்வு அடிப்படையில் தொல்காப்பியர் வகுத்த அகத்திணையியலின் கூறுகளான முதல்பொருள் (காலம் மற்றும் பொழுது), கருப்பொருள் (பிராணிகள் மற்றும் தாவரங்கள்), உரிப்பொருள் (தலைவன் தலைவி வாழ்வில் அன்பினால் நிகழும் ஒழுக்கங்களாகும்) அடிப்படையில் குறிஞ்சி (மலை), முல்லை (காடு), மருதம் (வயல்), நெய்தல் (கடற்கரையும் கடலும்), பாலை (பாலைவனம்) ஆகிய திணைப்பகுப்புகளின் வாயிலாக பகுத்தாயப்பட்டுள்ளது. உரிப்பொருளானது தலைவன் தலைவி வாழ்வில் அன்பினால் நிகழும் ஒழுக்க நெறிகளான புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல், ஒருதலை காதல், வயதுக்கு பொருந்தாக் காதல் எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மூன்று நாவல்களிலும் சங்க கால இலக்கியங்களிலும் விரவியுள்ள உரிப்பொருளை மட்டும் ஆய்வுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அகத்திணைக் கூறுகளில் உரிப்பொருளானது 20 இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவில் செந்தாமரை நாவலில் 11 உரிப்பொருள்களும் கள்ளோ காவியமோ நாவலில் ஆறு உரிப்பொருள்களும் கரித்துண்டு நாவலில் 3 உரிப்பொருள்களும் இடம்பெற்றுள்ளதைக் கண்டுபிடிக்கப்பட்டடுள்ளது. மேலும், மு, வரதராசன் நாவல்களிலுள்ள கதைமாந்தர்களின் வாழ்க்கை முறைக்கும் சங்க காலப் படைப்புகளில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்களுக்கும் எந்த வேறுபாடுகளும் இல்லை என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நிறைவாக, தற்கால நாவல்களில் உரிப்பொருள் அடிப்படையிலான அகத்திணைக் கூறுகள் சித்தரிக்கப்படுகின்றன. தற்கால உரைநடைப் படைப்பிலக்கியங்களைப் படைப்பதற்குச் சங்க இலக்கிய அகத்திணை மரபுகளைப் பயன்படுத்த முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**UNSUR *AKATHTHIN:AI* DALAM NOVEL M.VARATHARASAN**

## ABSTRAK

Kajian ini bertujuan mengenal pasti serta menganalisis unsur *akaththin:ai* dan membandingkan corak kehidupan watak dalam novel M.Varatharasan dengan watak dalam karya zaman *cangkam* (500 Sebelum Masihi – 200 Masihi) mengikut unsur *akaththin:ai* dalam tiga buah novel M. Varatharasan. Kajian ini adalah sebuah kajian kepustakaan yang menggunakan kaedah analisis kandungan serta teori *akaththin:ai* yang dipelapori oleh *Tholka:piar* dalam zaman *cangkam*. Unsur *akaththin:ai* menerangkan kehidupan masyarakat Tamil di kawasan *kutinjci* (gunung), *mullai* (hutan), *marutham* (sawah), *nheythal* (pantai dan laut), *pa:lai* (gurun) berdasarkan kepada tiga ciri seperti *mutalporul* (musim dan waktu), *karupporul* (fauna dan flora) dan *uriporul* (cinta dan kasih sayang). Ciri *Uriporul* menerangkan amalan dan kegiatan manusia dari aspek cinta dan kasih sayang seperti perjumpaan, perkampungan, merajuk, menanti-nantikan, perpisahan, percintaan sehala dan percintaan tidak mengikut umur. Kajian ini hanya memfokuskan ciri *uriporul* (cinta dan kasih sayang) sahaja. Dapatan kajian menunjukkan terdapat sebanyak 20 ciri *uriporul* masing-masing 11 dalam novel *Sentha:marai*, enam dalam novel *Kal:l:o Ka:viyamo:* dan tiga dalam novel *Kariththun:tu*. Selain itu, pemikiran serta corak kehidupan watak-watak dalam novel M.Varatharasan dan watak-watak dalam karya zaman *cangkam* adalah hampir sama berdasarkan teori *akaththin:ai*. Kesimpulannya, amalan kehidupan si teruna dan si gadis dalam zaman *cangkam* masih dapat digambarkan dalam novel-novel zaman moden seperti dalam novel M. Varatharasan. Implikasinya, unsur *akaththin:ai* zaman *cangkam* boleh dijadikan panduan dalam menghasilkan karya-karya prosa moden.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## THE ELEMENTS OF *AKATHTHIN:AI* IN THE NOVELS BY M.VARATHARASAN

## ABSTRACT

The purpose of this study is to identify and analyze the elements of *akaththin:ai* and to compare the pattern of life in M.Varatharasan's novel with the characters in the *cangkam* era (500 BC - 200 AD) according to the theory of *akaththin:ai* in three novels by M. Varatharasan. This study is a library research using the content analysis method and *akaththin:ai* theory pioneered by Tholka:piar in the *cangkam* era. Elements of *akaththin:ai* describes the life of the Tamils in the area of *kutinjci* (mountain), *kutinjci* (forest), *marutham* (field), *nheythal* (beach and sea), *pa:lai* (desert) based on three characteristics such as *mutalporul* (season and time), *karupporul* (fauna and flora) and *uriporul* (love and affection). The characteristics of *Uriporul* describes human practices and activities from the aspects of love and affection such as meeting, presence, sulking, waiting, parting, one sided love and love without seeing the age difference. This study focuses only on the characteristics of love and affection love and affection (*uriporul)*. The findings show that there are 20 *uriporul* characteristics of which 11 in the novel *Sentha:marai*, six in the novel *Kal:l:o Ka:viyamo:* and three in the novel *Kariththun:tu*. Besides that, the thoughts and patterns of the life of the characters in M.Varatharasan's novels and the characters in the *cangkam* era are very similar based on the *akaththin:ai* theory. In conclusion, the practices of the life of the young male and female during *cangkam* era can still be depicted in modern-day novels such as those by M. Varatharasan. The implication is that the *akaththin:ai's* element during *cangkam* era can be a guide in producing works in modern prose.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# KANDUNGAN


| | Muka Surat |
|---|---|
| **PERAKUAN KEASLIAN PENULISAN** | ii |
| **PENGESAHAN PENYERAHAN TESIS** | iii |
| **நன்றியுரை** | iv |
| **ஆய்வுச்சாரம்** | v |
| **ABSTRAK** | vi |
| **ABSTRACT** | vii |
| **KANDUNGAN** | viii |
| **அட்டவணைப் பட்டியல்** | xi |
| **குறிவரைவுப் பட்டியல்** | xii |
| **TRANSLITERASI** | xiii |
| **இயல் 1 அறிமுகம்** | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 2 |
| 1.3 ஆய்வுச் சிக்கல் | 7 |
| 1.4 ஆய்வின் நோக்கம் | 10 |
| 1.5 ஆய்வின் வினா | 11 |
| 1.6 ஆய்வு முக்கியத்துவம் | 11 |
| 1.7 ஆய்வு எல்லை | 13 |
| 1.8 ஆய்வுச் சான்றாதாரம் | 14 |
| 1.8.1 முதன்மைச் சான்றாதாரம் | 15 |
| 1.8.2 துணைமைச் சான்றாதாரம் | 15 |
| 1.9 கலைச்சொல் விளக்கம் | 16 |
| 1.9.1 அகத்திணை | 16 |
| 1.9.2 நாவல் | 17 |
| 1.9.3 உரிப்பொருள் | 19 |
| 1.9.4 நாவலாசிரியர் மு. வரதராசன் | 19 |
| 1.10 தொகுப்புரை | 21 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 2 முந்தைய ஆய்வு**


2.1 முன்னுரை 22
2.2 உள்நாட்டு ஆய்வுகள் 23
2.3 வெளிநாட்டு ஆய்வுகள் 27
2.4 தொகுப்புரை 30


**இயல் 3 ஆய்வு நெறிமுறைகள்**


3.1 முன்னுரை 31
3.2 ஆய்வு வடிவமைப்பு 32
3.3 ஆய்வுக் கட்டமைப்பு 33
3.4 ஆய்வு அணுகுமுறை 34
3.4.1 நூலக ஆய்வு 34
3.4.2 விளக்கமுறை ஆய்வு 36
3.5 தரவு சேகரிப்பு முறை 37
3.6 தரவு பகுப்பாய்வு முறை 38
3.6.1 தரவு வாசிப்பு 38
3.6.2 தரவு தெரிவு 39
3.6.3 தரவு வகைப்பாடு 39
3.7 ஆய்வுக் கோட்பாடு 40
3.7.1 அகத்திணைக் கோட்பாடு 40
3.7.1.1 குறிஞ்சி 43
3.7.1.2 முல்லை 44
3.7.1.3 மருதம் 45
3.7.1.4 நெய்தல் 46
3.7.1.5 பாலை 47
3.7.1.6 பெருந்திணை 48
3.7.1.7 கைக்கிளை 49
3.8 கோட்பாடு வடிவமைப்பு 51
3.9 தொகுப்புரை 52


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 4 ஆய்வு முடிவுகளும் விவாதங்களும்**

4.1 முன்னுரை 53
4.2 அகத்திணை 54
4.2.1 குறிஞ்சி 55
4.2.1.1 உரிப்பொருள் 56
4.2.2 முல்லை 62
4.2.2.1 உரிப்பொருள் 63
4.2.3 மருதம் 73
4.2.3.1 உரிப்பொருள் 74
4.2.4 நெய்தல் 88
4.2.4.1 உரிப்பொருள் 89
4.2.5 பாலை 97
4.2.5.1 உரிப்பொருள் 98
4.2.6 பெருந்திணை 113
4.2.7 கைக்கிளை 124
4.3 அகத்திணைக் கூறுகள், உரிப்பொருள் அடிப்படையில் அதிகம் இடம்பெற்றுள்ள நாவல்கள் 129
4.3.1 செந்தாமரை நாவலில் இடம்பெற்றுள்ள அகத்திணை உரிப்பொருள்கள் 130
4.3.2 கள்ளோ? காவியமோ? நாவலில் இடம்பெற்றுள்ள அகத்திணை உரிப்பொருள்கள் 130
4.3.3 கரித்துண்டு நாவலில் இடம்பெற்றுள்ள அகத்திணை உரிப்பொருள்கள் 131
4.4 தொகுப்புரை 133

**இயல் 5 ஆய்வுக் கண்டடைவுகளும் பரிந்துரைகளும்**

5.1 முன்னுரை 135
5,.2 ஆய்வு கண்டடைவுகள் 137
5.2.1 அகத்திணைக் கூறுகள் 138
5.2.2 உரிப்பொருள் அடிப்படையிலான திணைப்பகுப்பு 138
5.2.3 சங்க கால மாந்தருக்கும் மு. வரதராசன் நாவல் கதைமாந்தருக்கும் உள்ள அகத்திணைக் கூறுகளின் அடிப்படையில் உரிப்பொருளைத் தொடர்புப்படுத்தி ஒப்பிதல் 142
5.3 தொடர் ஆய்வுக்கானப் பரிந்துரைகள் 143
5.4 தொகுப்புரை 144
மேற்கோள் நூல்கள் 146

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணைப் பட்டியல்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1.1 | ஆய்வுக்குத் தெரிவுசெய்யபட்ட மு.வரதராசன் நாவல்கள் | 14 |
| 4.1 | மு, வரதராசன் நாவல்களில் இடம்பெற்றுள்ள குறிஞ்சித் திணையின் உரிப்பொருள் | 56 |
| 4.2 | மு, வரதராசன் நாவல்களில் இடம்பெற்றுள்ள முல்லைத் திணையின் உரிப்பொருள் | 63 |
| 4.3 | மு, வரதராசன் நாவல்களில் இடம்பெற்றுள்ள மருதத் திணையின் உரிப்பொருள் | 74 |
| .4.4 | மு, வரதராசன் நாவல்களில் இடம்பெற்றுள்ள நெய்தல் திணையின் உரிப்பொருள் | 90 |
| 4.5 | மு, வரதராசன் நாவல்களில் இடம்பெற்றுள்ள பாலைத் திணையின் உரிப்பொருள் | 99 |
| 4.6 . | மு, வரதராசன் நாவல்களில் இடம்பெற்றுள்ள பெருந்திணையின் ஒழுக்கம் | 115 |
| 4.7 | மு, வரதராசன் நாவல்களில் இடம்பெற்றுள்ள கைக்கிளையின் ஒழுக்கம் | 126 |
| 4.8 | *செந்தாமரை* நாவல்களில் இடம்பெற்றுள்ள அகத்திணை உரிப்பொருள்கள் | 130 |
| 4.9 | *கள்ளோ? காவியமோ?* நாவல்களில் இடம்பெற்றுள்ள அகத்திணை உரிப்பொருள்கள் | 131 |
| 4.10 | *கரித்துண்டடு* நாவல்களில் இடம்பெற்றுள்ள அகத்திணை உரிப்பொருள்கள் | 132 |
| 4.11 | மு. வரதராசனின் நாவல்களிலுள்ள அகத்திணைக் கூறுகளில் உரிப்பொருள் | 138 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# குறிவரைவுப் பட்டியல்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வுக் கட்டமைப்பு | 33 |
| 3.2 | அகத்துணைக் கூறுகள் - உரிப்பொருள் கோட்பாட்டுக் கட்டமைப்பு | 51 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# TRANSLITERASI TAMIL

Penggunaan transliterasi nama-nama dan istilah-istilah Bahasa Tamil melalui Bahasa Melayu adalah berdasarkan kepada Sistem Transliterasi yang digunakan dalam Tamil Culture. Berikut adalah dasar-dasar kepada transliterasi huruf-huruf Bahasa Tamil yang digunakan

## உயிரெழுத்துகள் / HURUF-HURUF VOKAL

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ | : | *a* | உ | : | *u* | ஐ | : | *ai* |
| ஆ | : | *ã* | ஊ | : | *ü* | ஒ | : | *o* |
| இ | : | *i* | எ | : | *e* | ஓ | : | *õ* |
| ஈ | : | *ï* | ஏ | : | *ë* | ஔ | : | *au* |

## மெய்யெழுத்துகள் / KONSONAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| க் | : | *k* | ங் | : | *n* | ய் | : | *y* |
| ச் | : | *c* | ஞ் | : | *ñ* | ர் | : | *r* |
| ட் | : | *t* | ண் | : | *n* | ல் | : | *l* |
| த் | : | *t* | ந் | : | *n* | வ் | : | *v* |
| ப் | : | *p* | ம் | : | *m* | ழ் | : | *l* |
| ற் | : | *r* | ன் | : | *n* | ள் | : | *l* |

## கிரந்த எழுத்துகள் / SANSKRIT

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஜ் | : | *j* | ஷ் | : | *s* | ஸ் | : | *s* |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

# அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.1 முன்னுரை

முதலாவது இயலில் மு. வரதராசன் நாவல்களில் அகத்திணைக் கூறுகள் என்ற தலைப்பில் மேற்கொள்ளப்படும் இவ்வாய்வில், ஆய்வு அறிமுகத்திற்குத் தேவைப்படும் ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு முக்கியத்துவம், ஆய்வு எல்லை, ஆய்வு சான்றாதாரங்கள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.2 ஆய்வுப் பின்னணி

ஐரோப்பியர்களின் வருகையினால் தமிழிலக்கிய உலகிற்குப் புது வரவுகள் கிடைத்தன. அத்தகைய புது வரவுகளில், உரைநடை இலக்கிய வளர்ச்சியின் ஒரு பகுதியாக நாவல் என்ற புதிய இலக்கிய வடிவம் கிடைத்தது. நாவல் மனித நாகரிகம் கண்டுபிடித்த ஆற்றல்மிக்க இலக்கிய வடிவமாகும். நாவல் இலக்கியத்தைக் கட்டுப்படுத்தும் விதிகள் அதிகம் இல்லை. இதனால்தான் நாவல் படைப்பாளர்கள் வாழ்வின் பல்வகை அம்சங்களை வெவ்வேறு கோணங்களிலிருந்து மனோபாவனைச் சிறப்புடன் கருத்துகளை வெளியிட முடிந்தது. ஆகவே இன்றையக் காலக்கட்டத்தை 'நாவல் யுகம்' என்றழைக்கும் அளவிற்கு செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது. (சபாபதி, வே. 1996)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழில் நாவல் இலக்கியம் என்பது மேலை நாட்டு இலக்கியத்தின் தாக்கமாகும். சமுதாய நிகழ்வுகளை அவ்வப்போது பதிவு செய்வதுடன் புதிய கருத்தாடல்களுக்கும் வழிவகுக்கும் வகையில் நாவல் இலக்கிய வடிவம் அமைந்துள்ளது. இதனுடன் கற்பனையாற்றலுக்கு இடையில் உண்மையான மனித வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வடிவமாகவும் நாவல் தோன்றியது எனில் மிகையாகாது. காலவெள்ளத்தில் அவ்வப்போது மேலோங்கி நின்ற சமூக கருதுகோள்கள் நாவல்களில் பேசப்படுவதால் சமூகத்தின் நிகழ்கால வரலாற்று ஆவணமாகவும் நாவலைக் கருதுகின்றனர் (இராசேந்திரன், ம. 1999).

நாவல் என்ற சொல் புதுமை என்ற பொருளைக் குறிப்பதால் தமிழில் புதினம் என்றும் அழைக்கப்படுகிறது. கதை இலக்கியம் நம் பழந்தமிழர்களின் சொத்து; நீண்ட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பாட்டுகளில் புனையத் தொடங்கி இன்றைய இலக்கிய வடிவங்களில் நாவலாக உருமாறின. நாவல் இலக்கியம் வளர்ச்சி அடைந்த பின் இயல்பாக நடந்தேறும் வாழ்க்கை சம்பவங்களைப் பிரதிபலிக்கும் நாவலாகப் பொருள்பட்டது (வரதராசன், மு. 1972).

நவீனத் தமிழ் இலக்கிய நாவலின் வரலாறு பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே நாவல் இலக்கியத்தின் தொடக்கம் மலரத் தொடங்கியது. ‘முனிசீப்’ வேதநாயகம் பிள்ளையின் படைப்பான *பிரதாப முதலியார் சரித்திரம்* (1876) என்ற நாவலிலிருந்து தொடங்குகிறது. அவரைப் போலவே, பலரும் வேறு துறைகளில் தொழில் செய்து கொண்டே தமிழ் இலக்கியத் துறைகளில் ஈடுபட்டுள்ளனர். வாழ்க்கையை உள்ளவாறு காட்டும் பாங்கு, நடப்பியல் முதற்கொண்டு நாட்டுப்பற்று, வரலாற்று நாவல்கள் நாவலாசிரியரின் கற்பனையிலும் சிந்தனையிலும் உதித்த எண்ணமே நாவலாகப் புனையப்படுகிறது. காலத்திற்கேற்ப நாவலின் கருப்பொருள் அமையும். அதோடு, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இந்தியர்களின் வாழ்க்கை முறையையும் அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும் நாவலாசிரியர் தன் கற்பனைக்கேற்ப நாவலாகப் புனைகிறார். நாவல் இலக்கியத்தின் வளர்ச்சியால் வாசகர்கள் பயனடைவதோடு, சிலர் நாவல் வாசிப்பதைப் பொழுது போக்கிற்காக வாசித்து மகிழ்கின்றனர். நாவல் இலக்கியம் 19ஆம் நூற்றாண்டிலிருந்து பீடுநடை போடத் தொடங்கியது (வரதராசன், மு. 1972).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நாவல் இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பின்தான் மக்களின் சமூக வாழ்க்கை, வர்க்க வேறுபாடு, இந்தியர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள், காதல் நிகழ்வுகள், குடும்ப உறவுகள் என பல கருப்பொருள்களில் நாவலாசிரியர்கள் கதைகளைப் புனையத் தொடங்கினர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நாவல்கள் பொதுவாக அத்தியாயங்களைக் கொண்டவையாக இருக்கும். இலக்கிய வடிவங்களில் மனித வாழ்க்கையைப் பற்றி மிக விரிவாகவும் தெளிவாகவும் சித்தரித்துக் காட்டுவதற்கு நாவல் இலக்கியம் பெரிதும் துணை புரிகின்றது. நாவல் இலக்கியம் நம் இலக்கிய உலகிற்குக் கிடைத்த ஓர் அரிய விஷயமாகக் கருதப்படுகிறது. அதோடு, நாவல்களில் இருக்கும் சமுதாயக் கருத்துகள் படிப்பவரின் மனதில் வெகுவாகப் பதிவதோடு மட்டுமல்லாமல் வாசகர்களுக்கு ஏதேனும் ஒரு சில செய்திகளையோ தகவல்களையோ வழங்குவதாகவும் அமைகின்றது. இம்மாதிரியான நாவல்கள் சமுதாயச் சீர்கேடுகளையும் சமுதாயத்திற்குத் தேவையான பற்பல தகவல்களையும் வழங்குவதால் சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு ஓர் உந்து சக்தியாகவும் திகழ்கின்றன (வரதராசன், மு. 1972).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய உலகில் போற்றுதற்குரிய நாவலாசிரியர் மு. வரதராசன். தமிழின் அனைத்துத் துறைகளிலும் மு. வரதராசன் தமது பங்களிப்பை ஆற்றியுள்ளார். இத்துறையில் ஈடு இணையற்று விளங்கும் இவரது நாவல்களில் குடும்பச் சூழல்கள், பெண்களின் நிலை, பொருளாதாரச் சிக்கல்கள், இளையோர் சீர்கேடுகள் எனப் பல்வேறு நிலைகளில் அமைந்த புதினக் கருப்பொருள் அமைந்துள்ளது மு.வரதராசனின் பாவை, அந்தநாள், செந்தாமரை போன்ற நாவல்கள் சிறந்த இலக்கியப் படைப்புகளாகும். இவரது கயமை, அல்லி புரட்சிகரமானப் படைப்புகளாகும். தொடர்ந்து, மலர்விழி, கரித்துண்டு, நெஞ்சில் ஒரு முள் சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டும் நாவல்களாகும். கள்ளோ? காவியமோ? நாவல் மு. வரதராசன் அவர்களுக்குப் புகழைத் தேடித் தந்த காவியமாகும். இவரது பெற்ற மனம் என்னும் நாவல் திரைப்படமாகவும் வெளிவந்துள்ளது. அகல்விளக்கு, மண்குடிசை, வாடாமலர் போன்ற நாவல்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அமரத்துவம் வாய்ந்தவைகளாகும். தமிழில் உள்ள அகப்பொருள் இலக்கியத்தையும் நாவலாசிரியர் விட்டு வைக்கவில்லை. சங்க காலக் கருத்துகள், அகப்பொருள் இலக்கியம் நாவலிலும் மற்றும் கட்டுரைப் படைப்புகளிலும் படைத்துள்ளார். இதன் தொடர்பாக தன் நண்பருடன் பேச்சு நிகழ்ந்தபோது, மு. வரதராசன் பதிலளித்ததைத் தொடர்ந்து அகத்திணைக் கோட்பாட்டிகேற்ப அரிச்சுவடியாக மலர்ந்ததே செந்தாமரை நாவல்.

> "இதென்ன அய்யா! காலத்திற்கு உதவாத கருத்துகள்! களவு ஒழுக்கம் என்றால் எனக்கு வெறுப்பாக இருக்கிறது. பகற்குறி, இரவுக்குறி, ஒருவழித் தணத்தல், அம்பல், அலர், இற்செறிப்பு, பசலை, தோழி, உடன்போக்கு - இந்தப் பெயர்களே பிடிக்கவில்லை," என்ற நண்பரின் வினாவிற்கு..... மு.வரதராசனார், "காலத்திற்கு உதவாத கருத்துகள் அல்ல. இக்காலத்தில் விளங்காத சொற்கள் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். இன்னும் காதல் வாழ்க்கையின் தொடக்கம் பெரும்பாலும் அந்த நிலையில் தான் இருக்கிறது. களவு ஒழுக்கத்தின் திணைப்புனம் முதலிய சூழல் மட்டுமே மாறியிருக்கிறது. உள்ளத்து உணர்வு நகரங்களில் மாறிவிட்டாலும் நாட்டுப் புறங்களில் பெரும்பாலும் அப்படியே இருக்கிறது"
> (வரதராசன், மு. 1955: ப.14).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழில் உள்ள அகப்பொருள் இலக்கிய இலக்கணத்தைப் பற்றிய நண்பரின் ஐயத்திற்கு, மு. வரதராசன் அவர்களின் மேற்கண்ட விளக்கம் அருமையானது. இவ்வாறு புனைந்த கதையே சில வேறுபாடுகளுடன் பாவை, செந்தாமரை போன்ற நாவல்கள் படைக்கப்பட்டன (இளங்கோ, ச.சு. 2011).

அகத்திணைக் கூறுகளின் அடிப்படையில், இன்பம் ஒன்றே அகம் என்றும்; அறம் பொருள், வீடு என்னும் மூன்றும் புறம் என்றும் விளக்கமளிக்கின்றது. அகம் என்பது மனிதச் சமுதாயம் முழுவதையும் ஒரே மனப்பான்மையுடன் நோக்கும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தன்மையுடையதாகும். அகத்திணை மரபு, அன்பையும் இன்பத்தையும் உணர்த்துவதை அகம் என்று பொருள்படுகிறது. அவை மக்களை நல்வழிப்படுத்தி வாழ்க்கையில் சிறந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கத் துணைபுரிகிறது. அன்பு, இன்பத்திற்கு முதன்மையாகும்; இன்பத்தின் தோற்றமாகிய புணர்ச்சியையும், அப்புணர்ச்சியின் நிமித்தங்களையும் உணர்த்தும் குறிஞ்சியை முதலில் கூறலாம். புணர்ச்சியால் பெற்ற அன்பினைத் தளரவிடாமல் அகந்திருத்தி அமைவதாகிய முல்லை விளங்குகிறது. அதையடுத்து அவ்வன்பின் நிலைபேற்றைக் காண்பதற்குரியப் பிரிவு பாலையாகும். இவற்றின் பயனாகிய ஊடலும், கூடலுமாகிய மருதத்தை நான்காவதாகக் கொள்ளலாம். இவைதான் பேரின்பத்தை அடையவிருக்கும் பெருவழி என்பதைத் தெரிவிக்கும் இரங்கலாகிய நெய்தல் இறுதியில் வருகிறது. தொடர்ந்து, பெருந்திணையானது வயதிற்கு ஏற்பற்ற காதலைக் குறிக்கின்றது. வயது முதிர்ந்த ஆணோ பெண்ணோ வயது குறைந்த ஆண் அல்லது பெண்ணுடன் காதல் கொள்வது இதன் பொருளாகும். அகத்திணையில் கைக்கிளை என்பது காமப் பருவத்தை இன்னும் எய்தாத ஆனால் அண்மையில் எய்தும் நிலையில் உள்ள பெதும்பைப் பருவப் பெண்ணைத் தோற்றத்தில் குமரி என மயங்கிப் பருவம் எய்திய இளைஞன், அறியாமல் தனக்குள் எழும்பிய காதலின் முகிழ்ப்பை மட்டிலும் கூறி அமைவதாகும் (வரதராசன். மு, 1972).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தற்போதைய தமிழ் சமூகத்தினர் இன்றளவும் சங்க காலத் தமிழர்களின் கலாச்சாரத்தைத் தங்களது வாழ்க்கையில் பின்பற்றுவதைப் பார்க்க முடிகிறது. சங்கக் காலத் தமிழர்களின் வாழ்வில் பல வகையான பழக்க வழக்கங்களைக் காண முடிகிறது. இச்செய்தியினை மு.வரதராசன் அவர்களின் நாவல் படைப்புகள் உறுதிப்படுத்துகின்றன (இளங்கோ. ச.சு. 2011).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.3 ஆய்வுச் சிக்கல்

தமிழ் மக்கள் போற்றும் காலம் சங்க காலம். கி.மு 500 முதல் கி.பி. 200 வரையில் உள்ள காலக்கட்டமே சங்க காலம் என வழங்கினர். தொல்காப்பியமும் ஏறக்குறைய அந்தக் காலத்தைச் சார்ந்தது எனலாம். ஒரு நாட்டில் எத்தனையோ நூற்றாண்டுகளாக வாய்மொழி இலக்கியம் மக்களிடையே வழங்கியுள்ளதைத் தான் புலவர்கள் இலக்கியப் படைப்புகளாகப் பாடியுள்ளனர். புரவலர்கள், மன்னர்கள் அனைவரும் புலவர்களை ஆதரித்துச் சங்கம் அமைத்துப் புலவர்களின் பாடல்களையும் போற்றி ஆதரித்தனர். சங்க காலத்தில் வாழ்ந்த பழந்தமிழர்களின் களவு, கற்பு வாழ்க்கையினை அகம் என்றும்; வீரம், கொடை, புகழ் போன்ற வாழ்க்கையினைப் புறம் என்றும் பகுத்து வாழ்ந்தனர். குடும்பம் சார்ந்த வாழ்வியல் முறைகளை அகத்திணைக் கூறுகளின் அடிப்படையில் அமைந்தவையாகும் (அருணாசலம், ப. 1975).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அக்காலத்தில் வாழ்ந்த பழந்தமிழர்களுடைய சமூக வாழ்க்கையை அதன் நில அமைப்புகள் உருவாக்கியது. இவ்வமைப்பு, மு. வரதராசன் நாவல் காலக்கட்ட மக்களைவிடப் பண்டையக்கால மக்களைப் பொறுத்தவரையில் பொருத்தமானது. பண்டையக்கால மக்களின் வாழ்வியல் முறைகள் இக்காலத்திலமைந்த தொழில் முறைகள், போக்குவரவு, செய்தித் தொடர்பு வசதிகளும் இல்லை. தமிழகத்தின் நிலத்தில் மலைகள், காடுகள், ஆற்று வெளிகள், கடற்கரைகள், பாலை நிலம் அல்லது வறண்ட பகுதிகளும் இருப்பதால் மக்கள் தங்கி வாழ்ந்த நில அமைப்புகள். மலையும் மலையைச் சார்ந்த நிலங்களுக்குக் குறிஞ்சி; காடும் காடு சார்ந்த நிலங்களுக்கு முல்லை, நெல் வயல் அல்லது பயிர் விளையும் சமதரை வெளிநிலங்களுக்கு மருதம், கடற்கரை நிலங்களுக்கு நெய்தல்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வறண்ட நிலங்களுக்குப் பாலை என்ற ஐந்து வகை நிலப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது (*அகத்திணை இயல் சூத்திரங்கள்*, 3,4,5). இந்த நிலப்பிரிவு, மக்களுடைய தொழில்கள், அவர்களுடைய வழிபாட்டு தெய்வங்கள் தொடர்பான சூத்திரங்கள் அனைத்தும் வெறும் கற்பனை என்று ஒதுக்கி விடுதல் இயலாது. அவையெல்லாம் அக்காலத் தமிழருடைய சமூக வாழ்வுக்குப் பின்னணியாக அமைந்தவையாகக் கருத வேண்டும் (சூரியநாராயணன், பா. 1998). அகத்திணை கூறுகளுக்கு ஒப்ப அந்தந்த நிலத்தில் கிடைத்த உணவுப் பொருள்களுக்காக வேட்டையாடுதல், வயலை உழுதல், மீன் பிடித்தல் போன்ற தொழில்களை மேற்கொண்டனர். அன்பு, அறிவு, அழகு பொருந்திய பழங்கால மக்கள் அகத்திணைக் கூறுகளுக்குப் பொருத்தமாகத் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் களவு வாழ்க்கை; கற்பு வாழ்க்கையினை அந்தந்த நிலங்களுக்குப் பொருந்த அன்போடு வாழ்ந்தனர். இத்தகைய மரபுகளையும் கோட்பாடுகளையும் இயம்பும் நூலே தொல்காப்பியரின் தொல்காப்பியம் (வரதராசன், மு. 1989).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்ந்து கி.பி. 200 முதல் கி.பி. 600 வரையிலுள்ள காலப்பகுதி சங்கம் மருவிய காலமாகும். இக்காலக்கட்டத்தில், சங்க காலத்தில் சிறப்புற்றிருந்த தமிழகம் சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சனையினால் மெல்லச் சிதைவுறத் தொடங்கியது. தமிழகத்தில் பெருவாரியாக ஆரியர்கள் நுழைந்தனர். இதன் விளைவு, தமிழ்நாட்டு மக்களிடையே பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர் என்னும் நால்வகை பகுப்பினால் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் ஏற்படலாயின. அறநூல்கள் வழி ஏற்றத்தாழ்வினைக் களையவும் மக்களிடையே ஒற்றுமையைப் பேணவும் முயற்சிகள் மேற்கொண்டனர் (வரதராசன், மு. 1979).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அற ஒழுக்கங்களை ஆதாரமாகக் கொண்ட சமண, பௌத்த மதத்தினரின் மதப்பிரச்சாரத்தில் கவரப்பட்ட மக்கள், அம்மதங்களைத் தழுவினர். பௌத்த சமயத்தின் மணிமேகலையும் சமண சமயத்தினரின் சிலப்பதிகாரமும் மக்களிடையே அற ஒழுக்கத்தினை மேம்பாடடையத் துணை புரிந்தன. சங்க காலத்தில் காணப்பட்ட ஓயாத போர் இதனால் விளைந்த இழப்புகள், துன்பங்கள், சமூகத்தில் ஆண்களின் அதிகமான இழப்பு; இயற்கை இன்பத்தில் அதிக ஈடுபாடு; மது, மாது இரண்டும் சமூகத்தில் மலிந்த நிலை; பரத்தையர் ஒழுக்கம், குறிக்கோளில்லாதச் சிக்கலான வாழ்க்கையமைப்பு, மக்கள் புதிய மாற்றத்தினை நாடியமை, உலகியலில் ஏற்பட்ட வெறுப்பு நிலை அனைத்தும் அறநூல்கள் தோன்றக் காரணமாக அமைந்தன. திருக்குறள் போன்ற நீதி நூல்கள், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போன்ற பக்திப்பாடல்கள் மரபினைக் கொண்ட இலக்கிய நூல்கள் அனைத்தும் மக்களின் வாழ்க்கை நெறி கொள்கைகளை முழுமையாக விளக்கி அற ஒழுக்கங்களைப் பொருளாகக் கொண்டுள்ள அற நூல்கள் தமிழ்மக்களைப் பண்படுத்தி மனிதக்குலத்தை உயர்த்தியதோடு நெறியான வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் அமைந்தது (வரதராசன், மு. 1979).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மு. வரதராசன் நாவல்கள் அனைத்தும் இருபதாம் நூற்றாண்டு காலக்கட்டத்தில் எழுதப்பட்டவை ஆகும். ஆய்வாளர், இருபதாம் நூற்றாண்டு காலக்கட்டச் சுழலில் வாழ்ந்த கதைமாந்தர்கள் வாழ்க்கை முறையையும்; சங்க காலக் காலக்கட்டச் சுழலில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையையும் அகத்திணைக் கூறுகளில் ஒன்றான உரிப்பொருள் அடிப்படையில் ஆய்வு செய்துள்ளார். ஆய்வாளர், தமது ஆய்வில் பழந்தமிழரின் வாழ்வியல் முறைகள் அனைத்தும் காலவெள்ளத்தில் மறைந்து விட்டனவா? அல்லது அகத்திணைக் கூறுகள் அனைத்தும் பின்பற்றப்படுகின்றவா?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அல்லது ஒரு சிலவற்றை இன்னும் கடைப்பிடிக்கின்றனரா? அல்லது இன்றையச் சூழலுக்கு ஒப்ப நாகரீக மோகத்தில் அகத்திணைக் கூறுகள் அனைத்தும் புறக்கணிக்கப்படுகின்றவா? என்ற கூறுகளில் ஆய்வினை மேற்கொள்கிறார். மு.வரதராசன் நாவல்கள் வழி கதைமாந்தர்களின் நடப்பு வாழ்வினைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டவல்லன என்பதனைக் கருத்திற் கொண்டு, ஆய்வை மேற்கொண்டுள்ளார். மாந்தன், காலவெள்ளத்தில் பல மாற்றங்களைக் கண்டாலும் எத்தகையச் சூழலிலும் வாழ்வியல் கோட்பாடுகளின் மாற்றம் முற்றிலும் அழியாது, மாறாகப் புதிய சூழலுக்கு ஏற்ப தாய் சேய் உறவுபோல் தொடர்வது இயற்கையே என்பதை அறியலாம் (வரதராசன, மு. 1979).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.4 ஆய்வின் நோக்கம்

மு. வரதராசன் நாவல்களில் அகத்திணைக் கூறுகள் என்னும் இவ்வாய்வு கீழ்க்காணும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது:

1. மு.வரதராசன் நாவல்களில் வெளிப்படும் அகத்திணைக் கூறுகளை உரிப்பொருள் அடிப்படையில் அடையாளம் காணுதல்.
2. மு.வரதராசன் நாவல்களில் விரவியுள்ள அகத்திணைக் கூறுகளை உரிப்பொருள் அடிப்படையில் பகுப்பாய்தல்.
3. மு.வரதராசன் நாவல்களில் காணப்படும் கதைமாந்தர்களின் வாழ்க்கை முறைகளையும் சங்க கால மாந்தர்களின் வாழ்க்கை முறைகளையும் உரிப்பொருள் அடிப்படையில் ஒப்பிட்டு விளக்குதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.5 ஆய்வு வினா

இந்த ஆய்வு கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைகாணும் நோக்கில் அமைந்துள்ளது. அவை கீழ்க்காணுமாறு:

1. மு.வரதராசன் நாவல்களில் வெளிப்படும் அகத்திணைக் கூறுகளில் உரிப்பொருள் அடிப்படையில் உள்ளவை யாவை?
2. மு.வரதராசன் நாவல்களில் விரவியுள்ள அகத்திணைக் கூறுகளில் உரிப்பொருள் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளனவா?
3. மு.வரதராசன் நாவல்களில் காணப்படும் கதைமாந்தர்களின் வாழ்க்கை முறைகளிலும் சங்க கால மாந்தர்களின் வாழ்க்கை முறைகளிலும் உரிப்பொருளின் அடிப்படையில் உள்ள வேறுபாடுகள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.6 ஆய்வு முக்கியத்துவம்

அகத்திணைக் கூறுகள் குறித்த இளங்கலை, முதுகலை, முனைவர் பட்ட ஆய்வுகள் இதுவரை மலேசிய மண்ணில் எழாத நிலையில் தமிழகத்தில் சங்கப் பாடல்களில் அகத்திணைக் கூறுகள் பலர் ஆய்வு செய்த தரவுகள் தெரிய வந்துள்ளன. எனினும், ஆய்வாளரின் சிந்தனையில் நாவல் இலக்கியத்தில் குறிப்பாக மு. வரதராசன் நாவல்களில் அகத்திணைக் கூறுகள் அணுகுமுறையில் இதுவரை யாருமே ஆய்வு செய்யாததைத் திட்டவட்டமாகக் கூறலாம். இவ்வாய்வு இனி வரும் ஆய்வாளர்களுக்கும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


படிப்பவர்களுக்கும் கவிதை இலக்கியத்தைத் தவிர்த்து நவீன இலக்கியங்களிலும் அகத்திணைக் கூறுகள் அணுகுமுறையில் செய்யும் ஆய்வு வழிகாட்டுதலாக அமையும். அதுமட்டுமல்லாமல், இவ்வாய்வின் நோக்கம் யாதெனில் நாவல்களில் உரிப்பொருள் அடிப்படையில் சங்க கால மக்களுக்கும் நாவல் கதைமாந்தர்களுக்கும் உள்ள வாழ்வியல் ஒருமைபாடுகளையும் வேற்றுமைகளையும் ஆராய வாய்ப்பாக அமையும்.

மு. வரதராசன் நாவல்களில் அகத்திணைக் கூறுகள் அமைந்துள்ளன என்பதை எடுத்துரைக்க, *கரித்துண்டு* (1953), *செந்தாமரை* (1946), *கள்ளோ காவியமோ?* (1947) ஆகிய நாவல்கள் துணை புரிந்துள்ளன என்றால் அது மிகையாகாது. சங்க காலத்தில் பழந்தமிழர்களின் வாழ்க்கை முறை, தேர்ந்தெடுக்கபட்ட மூன்று மு. வரதராசனின் நாவல்களில் இடம்பெற்ற கதைமாந்தர்களின் வாழ்க்கை முறையில் காணும் அகத்திணைக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கூறுகளில் உரிப்பொருளின் வேறுபாடுகளை அறிந்து கொள்ள முடிந்தது. அகத்திணை அடிப்படையில் வெவ்வேறான வாழ்க்கை முறையோடு வாழ்ந்து வந்த தமிழர்கள் மு. வரதராசனின் தேர்ந்தெடுக்கப்பட்ட நாவல்கள் வெளிவந்த காலக்கட்டத்தில் வாழ்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதனையும் தெரிந்து கொள்ள முடிந்தது. தனிமனிதன், குடும்பம், சமுதாயமானது மொழி, பண்பாடு, பொருளாதாரச் சிந்தனை என பழந்தமிழர்களின் வாழ்க்கைத் தரம் காலப்போக்கிற்கு ஏற்ப வெவ்வேறான பல மாற்றங்களை எதிர்நோக்குகின்றது. அவ்வாறு காலப்போக்கிற்கு ஏற்ப தமிழர்களும் பீடு நடைபோடத் தொடங்கி விட்டனர்.

மேலும், அகத்திணைக் கூறுகளாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என ஏழு வகையாக வகுக்கப்பட்டன. சங்க காலத்தில் வாழ்ந்த

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பழந்தமிழர்களின் வாழ்க்கை முறை இவ்வேழு கூறுகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டுள்ளன. நாவலில் காணும் கதைமாந்தர்கள் இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையில் அகத்திணைக் கூறுகளில் கால மாற்றங்களினால் உரிப்பொருள்கள் சில விடுபட்டும், சில இன்னமும் கடைபிடித்து வருவது பெருமைக்குரிய விசயமாகும். இதனைத் மு.வரதராசன் நாவல்களில் அகத்திணைக் கூறுகள் மிகத் துல்லியமாகவும் உயிரோட்டமாகவும் அமைந்ததைக் காண முடிகிறது. ஆய்வாளர், இவ்வாய்வின் வழி, தமிழர்களால், சங்க கால மரபைக் கட்டிக்காக்கப்படுகிறதை அறிய முடிகிறது.

## 1.7 ஆய்வு எல்லை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ் நாவல்களின் வளர்ச்சியின் எல்லை மிகப் பரந்து விரிந்தது. எனவே, ஆய்வின் வரையறையைக் கருத்தில் கொண்டு நவீன இலக்கியத்தில் இருபதாம் நூற்றாண்டில் சிறந்த நாவலாசியர் மு. வரதராசன் இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டார். மு. வரதராசன் தமிழில் பதின்மூன்று நாவல்களைப் படைத்துள்ளார். நாவல்களில் அகத்திணைக் கூறுகள் நிரம்பிய நாவல்கள் மூன்றனைத் தெரிவு செய்து ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இவரது பெரும்பாலான நாவல்கள் மக்களின் வாழ்க்கை முறையையும் பழக்க வழக்கங்களையும் அகத்திணைக் கூறுகளில் ஒன்றான உரிப்பொருள் அடிப்படையில் பொருந்திப் பேசுவதாகவே அமைந்துள்ளன. இருப்பினும், இந்த ஆய்வு *கரித்துண்டு, செந்தாமரை, கள்ளோ? காவியமோ?* ஆகிய நாவல்கள் இந்த ஆய்வினை மேற்கொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குத் தொல்காப்பியர் வகுத்தத் தமிழ்மொழியில் தொன்மையான

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நூலான தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள அகத்திணையில் உரிப்பொருள் இவ்வாய்வுக்கு எல்லையாக அமைகின்றன.

அட்டவணை 1.1
ஆய்வுக்குத் தெரிவுசெய்யபட்ட மு.வரதராசன் நாவல்கள்

| **எண்** | **தலைப்பு** | **வருடம்** |
|---|---|---|
| 1 | *கரித்துண்டு* | 1953 |
| 2 | *கள்ளோ? காவியமோ?* | 1947 |
| 3 | *செந்தாமரை* | 1946 |

மேற்குறிப்பிட்ட அட்டவணையில் இம்மூன்று நாவல்களின் வழி கிடைக்கப்பெற்ற அகத்திணைக் கூறுகளுள் ஒன்றான உரிப்பொருள் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.8 ஆய்வுச் சான்றாதாரம்

மு. வரதராசன் நாவல்களில் அகத்திணைக் கூறுகள் என்னும் இவ்வாய்விற்கு உறுதுணையாக தகுந்த முதன்மைச் சான்றாதாரங்களும் துணைமைச் சான்றாதாரங்களும் பயன்படுத்தபட்டுள்ளன. ஆய்வாளர் பல சான்றாதாரங்களைப் பயன்படுத்தியுள்ளார். இந்த ஆய்வுக்காக நேரடியாகப் பயன்படுத்தப்பட்ட மூலங்களான மு.வரதராசன் அவர்களின் நாவல்கள், தொல்காப்பியம் மூலமும் உரையும் நூல் யாவும் முதன்மைச் சான்றாதாரங்கள் ஆகும். ஆய்வுக்குத் துணை செய்யும் வகையில் பயன்படுத்தப்பட்ட மூலங்கள் யாவும் துணைமைச் சான்றாதாரங்கள் எனப்படும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.8.1. முதன்மைச் சான்றாதாரங்கள்

இவ்வாய்வுக்கு முதன்மைச் சான்றாதாரங்களாக நாவலாசிரியரின் மூன்று நாவல்கள் அமைந்துள்ளன. அவை *கரித்துண்டு, செந்தாமரை, கள்ளோ? காவியமோ?* ஆகும். இம்மூன்று நூல்களின் துணை கொண்டு இவ்வாய்வு திட்டமிட்டபடி படிப்படியாக நடத்தப்பட்டது. இம்மூன்று நாவலின் துணையோடு கிடைக்கப்பெற்ற அகத்திணைக் கூறுகளைக் கொண்டும் தொல்காப்பியம் மூலமும் உரையும் நூலின் துணையுடனும் தான் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.8.2 துணைமைச் சான்றாதாரம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆய்வாளர் தனது ஆய்விற்குத் துணைமைச் சான்றாதாரங்களாகப் பல நூல்களைப் பயன்படுத்தியுள்ளார். ஆய்வாளர் இளங்கலை, முதுகலை, முனைவர் பட்ட ஆய்வேடுகள், ஆய்விதழ்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளார். மேலும், ஆய்வாளர் இணையத்தளத்தைத் துணை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார். ஆய்வாளர் பண்டையக் காலத்திலிருந்து இக்காலம் வரை வெளியிடப்பட்டுள்ள பலதரப்பட்ட நூல்களை இந்த ஆய்வில் துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.9 கலைச்சொல் விளக்கம்

கலைச்சொல் விளக்கம் எனப்படுவது இந்த ஆய்வின் தலைப்பில் இடம்பெற்றுள்ள கலைச் சொற்களுக்கு விளக்கம் அளிப்பதாகும். மு.வரதராசன் நாவல்களில் அகத்திணைக் கூறுகள் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்கள் குறித்த விளக்கங்கள் ஆய்வு உள்ளடகத்தினை அறிய வழிவகுத்துள்ளது.

### 1.9.1 அகத்திணை

அகத்திணை என்பது சங்க காலத்தில் மக்கள் வாழ்ந்த வாழ்வியலைக் குறிக்கின்றது. சங்க இலக்கியங்கள் நம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்வினை இரு வகைகளாகப் பிரித்துக் காட்டுகின்றன. அவை அக வாழ்க்கை புற வாழ்க்கை ஆகும். அக வாழ்க்கையானது தலைவன் தலைவி இடையே அன்பு கலந்த வாழ்க்கை முறையைச் சித்தரிக்கிறது. அன்பானது மனம் தொடர்பு கொண்டமையால் சங்க இலக்கியங்களில் அகவாழ்க்கையாகப் பெயர் பெற்றது. தொல்காப்பியர், தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில், அகத்திணையை நில அடிப்படையில் ஏழு வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை ஆகும். இவைகளுள் ஐந்து திணைகள் மட்டுமே நிலவாரியாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த மக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளும் தொழில்களும் தனித்தனியே படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. கைக்கிளை எனப்படுவது ஒரு தலைக்காதலாகும். அதாவது,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இருவருள் ஒருவர் மட்டுமே மற்றவர் மீது செலுத்தும் அன்பாகும். பெருந்திணையானது வயதிற்கு ஏற்பற்ற காதலையும் குறிக்கின்றது. இது இருசாரருமிடையே அன்பில்லாத இணைப்பு. கணவன் மனைவியரிடையே காணப்படுவதனால் அது பெரும் திணை எனப்பட்டது. இத்தகைய ‘பொருந்தா இணைப்புகள்’ இருசாராருக்குமிடையே பெரும் வயது வேறுபாடுகளால் தோன்றின. இந்த இரண்டு வகைகளும் வாழ்வில் சீர்தூக்கிப் பார்க்கப்படுவதில்லை. இந்த இரண்டு வகைகளும் எந்த நிலங்களிலும் நிகழக் கூடியதாகும் (சூரியநாராயணன், பா. 1998).

### 1.9.2 நாவல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இருபதாம் நூற்றாண்டின் இக்கால இலக்கிய வகைகளில் நாவல் இலக்கியத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. நாவல், புதினம் அல்லது நாவல் என்பது அந்தந்த இடங்களில் வாழும் மனிதர்களின் உறவுகள், அவர்களின் எண்ணங்கள், செய்யும் செயல்கள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் உரைநடையால் அமைந்த நீண்ட கதை என்று புதிய அகராதி விளக்கம் தருகிறது. நாவல் (Novel) என்ற சொல் *நாவல்லா* Novella என்ற இத்தாலியச் சொல்லிலிருந்து தோன்றியதென்றும், பின்னர் நாவல் என்று அழைக்கப்பட்டது. தமிழில் இதனைப் புதினம் அல்லது நெடுங்கதை என்று குறிப்பிடப்படுகிறது. கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் போன்று இலக்கியத்தின் இன்னுமொரு வடிவமாக நாவல் இலக்கியம் விளக்குகின்றது. எழுத்தாளரின் கற்பனையிலும் எண்ணத்திலும் மலர்ந்து உரைநடையில் அமைந்த நீண்ட புனைக்கதையே நாவலாகும். இலக்கிய வடிவங்களில் மனித வாழ்க்கையைப் பற்றியும் பழக்க வழக்கங்கள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பற்றியும் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் படம்பிடித்துக் காட்டுவதற்கு நாவல் இலக்கியம் இடமளிக்கிறது. சமுதாயத்தைச் சிறப்பாகவும் ஆழமாகவும் சித்தரிக்கின்ற பிரதிபலிக்கின்ற தற்கால இலக்கிய வடிவங்களுள் நாவல் இலக்கியத்திற்கு தனியிடம் உண்டு (சபாபதி, வே. 1996).

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே நாவல் இலக்கியத்தின் தொடக்கம் மலரத் தொடங்கியது. தமிழில் எழுதப்பட்ட முதல் நாவல் *பிரதாப முதலியார் சரித்திரம்* (1876) ஆகும். இந்நாவலை எழுதியர் ‘முனிசீபு’ வேதநாயகம் பிள்ளை. நாவல் பல கூறுகளின் அடிப்படையில் புனையப்படுபவையாகும். இக்கூறுகளின் ஒருங்கிணைப்பே ஒரு வடிவத்திற்கு வாழ்க்கையின் பிரதிபலிப்பைக் காட்டும் வல்லமையைக் கொடுக்கின்றது. ஒரு நாவலைப் படித்துப் புரிந்து கொள்வதற்கு எளிதாக இக்கூறுகள் உதவுகின்றன. அதே
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
வேளையில் ஒரு நாவலின் பலமும் பலவீனமும் இக்கூறுகளின் அடிப்படையிலேயே அளவிடப்படுகிறது. நாவலின் கரு, கதைத் திட்டம், பாத்திரப் படைப்பு, பின்னணி, பின்னல், மொழிநடை, நோக்குநிலை முதலானவை முக்கியத்துவம் பெறுகின்றன. நாவல் கதைமாந்தர்களையும் அவர்களது பாத்திரப்படைப்பையும் வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களையும் கதையாகப் புனைவதாகும். மனிதனின் வாழ்வில் எதிர்பாராமல் நிகழும் சம்பவங்களையும் கதைகளாகப் படைப்பர். நாவலாசிரியர் தமது படைப்பில் சமுதாயக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, அதனுடன் கற்பனை வளங்களைச் சேர்த்து புனைக்கதைகளாக அமைப்பதன் மூலமாக நாவல்கள் உருபெறுகின்றன (சபாபதி, வே. 1996).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.3 உரிப்பொருள்

உரிப்பொருள் என்பது மக்களுக்கு உரிய பொருள். அதனை அகப்பொருள் என்றும் தமிழ் இலக்கணம் விளக்கும். அகப்பொருள் என்பது காதல் தொடர்பானச் செய்திகளைக் கூறும். பழங்கால மக்களுக்கு உரிய பொருளாகவும் குறிப்பிடுவர். அகத்திணையில் உரிப்பொருள், மக்கள் வாழ்க்கையை ஒட்டி இருக்கும். அவர்கள் வாழும் வாழ்க்கையை ஒட்டிய நெறி அல்லது ஒழுக்கமே உரிப்பொருளாகக் கருதப்படுகிறது. உரிப்பொருளை தமிழர்கள் ஐந்து வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கின்றனர். பண்டையத் தமிழர்கள், ஐந்து திணைக்கும் தனித்தனியாக ஐந்து வகை ஒழுக்கத்தை வரையறை செய்திருக்கின்றனர். அவை முறையே, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் தொல்காப்பியர் கூறியுள்ளார். (சுப்புரெட்டியார், ந. 2011).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.4 நாவலாசிரியர் மு. வரதராசன்

தமிழ்மொழியின் 20ஆம் நூற்றாண்டு கால வரலாற்றினைத் தனது படைப்புகளின் வழி வெளிப்படுத்தியப் பெருமைக்குரிய மு.வரதராசனின் இயற்பெயர் திருவேங்கடம். விழுமிய கல்வி, ஆளுமை உணர்ச்சி, கருத்துப் பரிமாற்றத் திறன், அறிவார்ந்த உணர்ச்சி ஆளுமை ஆகிய நான்கு கோணங்களிலும் மு. வரதராசன் அவர்கள் தம் தனிவாழ்விலும் படைப்புகளிலும் அறத்தினை உயிரினும் மேலாகப் போற்றியவர். இவரது படைப்பிலக்கியங்களுக்குச் ‘சாகித்திய அகாதெமி’ விருது வழங்கப்பட்டதோடு தமிழகத்தின் சிறந்த நாவலாசிரியராகவும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. ‘சாகித்திய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அகாதெமி' விருது மட்டுமல்லாமல் பாரதிய ஞானபீடம், தேசியப் புத்தகக் குழு, இந்திய மொழிக் குழு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம் - தமிழ் அகராதிக் குழு, நாட்டுப்புறப் பாடல்களும் நடனங்களும் பற்றிய குழு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு, ஆந்திரப் பிரதேச அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு, மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு, தமிழ்நாடு புத்தக வெளியீட்டுக் கழகம், ஆட்சிமொழிக் குழு, ஆட்சிமொழி சட்டக்குழு, தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ்க்கலை மன்றம், தமிழிசைச் சங்கம், மாநில வரலாற்றுக் கழகம், தமிழ் கலைக் களஞ்சியம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் அங்கம் வகித்ததோடு அனைத்திலும் தன்னுடைய முத்திரைகளைப் பதித்தவர் மு. வரதராசன். (மோகன், இரா. 2012).

மு.வரதராசன் அவர்கள் தமிழகத்தின் திருப்பத்தூரில் 25 ஏப்ரல் 1912ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தாயார் திருமதி அம்மாக்கண்ணு, தந்தையார் திரு முனுசாமி ஆவர். இவர் தமது ஆரம்பக் கால கல்வியினை வேலம் மற்றும் வலசம் ஆகிய இடங்களில் தொடர்ந்துள்ளார். அதன் பிறகு, எழுத்தாளராக, தமிழாசிரியராக, பச்சையப்பன் கல்லூரி விரிவுரையாளராக, அக்கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். இதனிடையே 1948ஆம் ஆண்டில் மட்டும் தனது முனைவர் பட்டப் படிப்பின் ஒரு பகுதியாக சென்னைப் பல்கலைக்கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். 1961ஆம் ஆண்டு முதல் 1971ஆம் ஆண்டு வரை சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பணி புரிந்தார். இவர் பல்வேறு பொறுப்புகளை வகித்து இறுதியில் 1971 முதல் 1974 வரை மதுரை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும்; சென்னை, திருப்பதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் 'செனட்' உறுப்பினர் பதவி வகித்துள்ளார். கேரளா, மைசூர், உஸ்மானியா, பெங்களூர்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆந்திரா, தில்லி, மதுரை, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழங்களின் கல்வி வாரிய உறுப்பினர் பதவிகளையும் வகித்துள்ளார். (மோகனரங்கன், கோ. 2003).

மு. வரதராசன், இலக்கியத் துறையில் நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், நீதி கதைகள், நாடகங்கள், கட்டுரைத் தொகுப்புகள், இலக்கியக் கூறுகளைக் கொண்ட நூல்கள், இலக்கிய வரலாறு, மொழி மற்றும் மொழியியல், சுயசரிதைக் கட்டுரைகள், ஆங்கில இலக்கியங்கள், குழந்தை இலக்கியங்கள், குழந்தை இலக்கணம் ஆகிய படைப்புகளைப் படைத்துள்ளார். அதுமட்டுமின்றி, மு.வரதராசன் பன்மொழிப் புலமைப் பெற்றவர். இவர் தமது 62-ஆம் அகவையில் 10 அக்டோபர் 1974 ஆம் ஆண்டில் காலமானார் (மோகனரங்கன், கோ. 2003).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.10 தொகுப்புரை

ஒரு நூற்றாண்டு காலம் கடந்து விட்டபோதும் மு. வரதராசனின் நாவல்கள் வாசகரால் படித்துப் பயனடையும் ஊடகமாக அமைந்துள்ளன. மு.வரதராசன் நாவல்களில் அகத்திணைக் கோட்பாடுகள் உரிப்பொருள் அடிப்படையில் கொண்ட இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு தொடர்பான தகவல்கள் யாவும் இப்பகுதியில் தெளிவாக விளக்கப்பட்டதோடு ஆய்வில் பயன்படுத்தப்பட்ட நாவல்கள் இன்றைய தலைமுறையினருக்கு வாழ்வில் வழிகாட்டியாக அமைவது திண்ணம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi